www.Padasalai.Net www.CBSEtips.in

# இரண்டாம் இடைப் பருவத் தேர்வு - 2023

10 - STD

பதிவு எண். 06 10 127

## சமூக அறிவியல்

நேரம்: 1.30 மதிப்பெண்கள்: 50

**I. சரியான விடையை தேர்ந்தெடு (8x1=8)**

1. கிழக்கிந்திய கம்பெனியின் நாடுபிடிக்கும் ஆசையை எதிர்த்து நின்ற முதல் பாளையக்காரர் யார்?

அ) மருது சகோதரர்கள் ஆ) பூலித்தேவர்

இ) வேலுநாச்சியார் ஈ) வீரபாண்டிய கட்டபொம்மன்

2. "நிலம் கடவுளுக்குச் சொந்தம்" என்று அறிவித்ததுடன் நிலத்தின் மீது வரிவிதிப்பதோ வாடகை வசூலிப்பதோ இறை சட்டத்திற்கு எதிரானது எனக் கூறியவர் யார்?

அ) டிடுமீர் ஆ) சித்து இ) டுடுமியான் ஈ) ஷரியத்துல்லா

3. முதலாவது வனங்கள் சட்டம் எந்த ஆண்டில் இயற்றப்பட்டது?

அ) 1858 ஆ) 1911 இ) 1865 ஈ) 1936

4. தமிழ்நாட்டில் அதிக பரப்பளவில் மாங்குரோவ் காடுகள் காணப்படும் மாவட்டம் எது?

அ) இராமநாதபுரம் ஆ) நாகப்பட்டிணம் இ) கடலூர் ஈ) தேனி

5. தமிழ்நாட்டில் மிகப் பெரிய நீர்மின்சக்தி திட்டம்

அ) மேட்டூர் ஆ) பாபநாசம் இ) சாத்தனூர் ஈ) துங்கபத்ரா

6. கூற்று : 1971 ல் இந்தோ - சோவியத் ஒப்பந்தத்தின் மூலம் இந்தியா சோவியத் யூனியனுடன் இணைந்தது

காரணம் : இது 1962 இன் பேரழிவுகாரணமான சீனப் போருக்கு பின் தொடங்கியது

அ. கூற்று சரி மற்றும் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்

ஆ. கூற்று சரி ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமில்லை

இ. கூற்று சரி காரணம் தவறு ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு

7. மக்மகான் எல்லைக்கோடு எந்த இரு நாடுகளுக்கு இடையே உள்ள எல்லை ஆகும்.

அ) பர்மா-இந்தியா ஆ) இந்தியா-நேபாளம் இ) இந்தியா-சீனா ஈ) இந்தியா-பூடான்

8. ஒரு நாடு, ஒரேமாதிரியான வரி என்பதை எந்த வரி உறுதிப்படுத்துகிறது?

அ) மதிப்புக்கூட்டுவரி (VAT) ஆ) வருமான வரி

இ) பண்டங்கள் மற்றும் பணிகள் வரி ஈ) விற்பனைவரி

**II. எவையேனும் 6 வினாக்களுக்கு விடையளி. (6x2=12)**

9. கிழக்கு மற்றும் மேற்கில் அமையப்பெற்ற பாளையங்களைக் கண்டறிந்து எழுதுக?
10. லக்னோ ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களைத் தொகுத்து வழங்கவும்?
11. சைமன்குழு புறக்கணிக்கப்பட்டது ஏன்?
12. தேரி என்றால் என்ன?
13. தமிழ்நாட்டின் முக்கிய தீவுகளை குறிப்பிடுக?
14. கோயம்புத்தூர் ஏன் தமிழ்நாட்டின் 'மான்செஸ்டர்' என அழைக்கப்படுகிறது?
15. பஞ்சசீல கொள்கைகளில் ஏதேனும் நான்கினைப் பட்டியலிடுக?
16. இந்தியாவின் அண்டை நாடுகளின் பெயர்களை எழுதுக?
17. கருப்புப்பணம் என்றால் என்ன?



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

18. தொழில்துறை தொகுப்பு என்றால் என்ன?

**III. ஏதேனும் 6 வினாக்களுக்கு விடையளி (6x5=30)**

19. கிழக்கிந்திய கம்பெனியாரை எதிர்த்து கட்டபொம்மன் நடத்திய வீரதீரப் போர்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக?

20. 1857 ஆம் ஆண்டு புரட்சிக்கான காரணங்கள் குறித்து விரிவாக ஆராயவும்?

21. **கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. கிலாபத் இயக்கத்துக்கு ______ தலைமை ஏற்றார்.

2. ______ என்பவர் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போது காங்கிரஸ் வானொலியை திரைமறைவாக செயல்படுத்தினார்.

3. காந்தியடிகள் அரசியல் குரு _______ ஆவார்.

4. W.C.பானர்ஜி இந்திய தேசிய காங்கிரஸின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆண்டு ____

5. வேலு நாச்சியாரும் அவரது மகளும் எட்டாண்டுகளாக _____ பாதுகாப்பில் இருந்தனர்.

22. **காரணம் கூறு :**

கிழக்குத் தொடர்ச்சி மலைகள் தொடர்ச்சியற்று காணப்படுகிறது.

**வேறுபடுத்துக :**

1. தாமிரபரணி மற்றும் காவிரி 2. உணவுபயிர் மற்றும் வாணிபப் பயிர்.

23. காவிரி ஆறு குறித்து தொகுத்து எழுதுக?

24. தமிழ்நாட்டின் பல்வேறு போக்குவரத்து முறைகளை விவரி?

25. அணிசேரா இயக்கம் பற்றி விரிவான குறிப்பு எழுதுக?

26. GST - யின் அமைப்பை எழுதுக?

27. தமிழ்நாட்டில் நெசவுத் தொழில் தொகுப்பு பற்றி எழுதுக?

28. **காலக்கோடு :**

1920-1940 வரை ஏதேனும் ஐந்து நிகழ்வுகளை காலக்கோடு வரைந்து எழுதவும் (இந்திய வரலாறு)

www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

CamScanner